வகுப்பு : XII பாடம் : தமிழ் மதிப்பெண் : 20

சிறுதேர்வு – 7 காலம் : 45 நிமிடங்கள்

**இயல் – 4 : சூரியனைப் பிரசவிக்கும் பாறை (முதல் திருக்குறள் வரை)**

---

**பகுதி – I ஒரு மதிப்பெண் வினாக்கள்** *(6 × 1 = 6)*

1. கல்வியை நிலைக்களனாகக் கொண்ட மெய்ப்பாடு –
   (அ) பெருமிதம் (ஆ) உவகை (இ) நகை (ஈ) மருட்கை
2. 'நகை' என்னும் மெய்ப்பாடு தோன்றும் நிலைக்களன்களுள் –
   (அ) கொடை (ஆ) பிணி (இ) பேதைமை (ஈ) செல்வம்
3. 'சாய்வு நாற்காலி' என்னும் புதினத்தின் ஆசிரியர் –
   (அ) பூமணி (ஆ) தோப்பில் முகமது மீரான் (இ) நகுலன் (ஈ) பிரமிள்
4. சென்னை வட்டாரத் தமிழில் இலக்கியம் படைக்கும் எழுத்தாளர் –
   (அ) புதுமைப்பித்தன் (ஆ) ஜெயகாந்தன் (இ) உ.வே.சா. (ஈ) திரு.வி.க.
5. 'பெருந்தேர்' – புணர்ச்சி வதி தருக –
   (அ) ஈறுபோதல் இனமிகல் (ஆ) ஈறுபோதல்
   (இ) ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல் (ஈ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல்
6. ஆராய்ந்து சொல்கிறவர் –
   (அ) அரசர் (ஆ) சொல்லியபடி செய்பவர்
   (இ) தூதுவர் (ஈ) உறவினர்

---

**பகுதி – II இரண்டு மதிப்பெண் வினாக்கள்** *(5 × 2 = 10)*

1. மெய்ப்பாடுகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?
3. வறுமையும் சிறுமையும் தருவது எது?
4. "நோய்" என முடியும் திருக்குறளை எழுது.
5. "வாழைக் காட்டில் குயில்கள் அலறிக் கொண்டும், காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன."
   (மரபுப்பிழை நீக்கி எழுதுக.)

---

**பகுதி – III அணி இலக்கணம் தருக** *(1 × 4 = 4)*

1. "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
   இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்."
   – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.